76

சென்னை நகர மேயர்

உயர்திரு S. இராமசாமி நாயுடு

அவர்களுக்கு

கோவை வாசிகள் அளித்த வரவேற்பும்

திரு T. A. இராமலிங்கம் செட்டியார்

அவர்களின் தலைமையுரையும்

உயர்திரு S. இராமசாமி நாயுடு அவர்களின்

பதில் சொற்பொழிவும்

திரு வி. ஆறுமுகம் பிள்ளை, திரு நஞ்சுண்டைய்யா

அவர்களின் முடிவுரையும்

16–12–48

'கோபால் பாக்' கோயமுத்தூர்

சென்னை நகர மேயர்

உயர்திரு S. இராமசாமி நாயுடு

அவர்களுக்கு

கோவை வாசிகள் அளித்த வரவேற்பும்

•

திரு T. A. இராமலிங்கம் செட்டியார்

அவர்களின் தலைமையுரையும்

உயர்திரு S. இராமசாமி நாயுடு அவர்களின்

பதில் சொற்பொழிவும்

திரு வி. ஆறுமுகம் பிள்ளை, திரு நஞ்சுண்டைய்யா

அவர்களின் முடிவுரையும்

16-12-48

கோபால் பாக் | கோயமுத்தூர்

சென்னை மேயர் உயர்திருவாளர்

S. இராமசாமி நாயுடு அவர்கள்

கோவைக்கு 16-12-48-ம் தேதி விஜயம் செய்தபொழுது
கோவை வாசிகள் மனமுவந்து அளித்த

வரவேற்பு.

திரு **R. V.** லட்சுமையய நாயுடு

ஞானம், கலை, கேள்வி, நன்முயற்சி, நுண்ணறிவு, தானம், தவம், வீரம், தயக்கமிலா நல் இதயம் இவை படைத்த விற்பன்ன விவேகமுள்ள செல்வரே வருக! வருக!! தங்கள் வரவு நல்வரவாகுக!!!

பழம்பெரும் பாண்டிய நாட்டைப் பெருமையுடன் ஆட்சிசெய்த நாயக்கர் மன்னர் வம்சத்தில் உதித்து மதுரையம்பதியில் பெருமையுடன் தாங்கள் வாழ்ந்து வந்தது அறிந்து மகிழ்கிறோம். தங்கள் சேவையைப் பாராட்டி **சென்னைமாநகரின் மேயர்** பதவிக்கு தங்களை தேர்ந்தெடுக்கப்பட்டதை அறிந்து நாங்கள் பெருமைப்படுகிறோம்.

நம் நாட்டின் தலைநகராகிய சென்னையில் முதன்மை பெற்று விளங்கும் காருண்யம் மிகுந்த அன்பரே! உங்களை எங்கள் அழகிய நகரத்திற்கு அன்புடன் வரவேற்கிறோம். **தென் இந்திய மான்செஸ்டர்** என விளங்கும் இந்நகர மக்கள் தங்கள் பொதுநலத் தொண்டைப் பாராட்டுகிறார்கள்.

தமிழ்நலம் வளர்க்கும் தக்கோய் வருக! வருக!!

சென்னை இராஜதானிக் கல்லூரியில் ஆங்கிலமும் தமிழும் பயின்றும், தமிழில் அளவிலா ஆர்வம் கொண்டும் தாங்கள் தமிழ்ப்பணி செய்வது எங்களுக்கு உற்சாகம்

ஊட்டுகிறது. காலஞ்சென்ற தமிழ்த் தாத்தா டாக்டர் **உ. வே. சுவாமிநாதையர்** திருவுருவச்சிலையை சென்னை இராஜதானிக் கல்லூரியில் ஸ்தாபனம் செய்தும் அவருடைய தமிழ்ப் பெருமை எப்பொழுதும் விளங்கும்படி ரூபாய் 5,600 வரை கொடுத்தும், வருடந்தோறும் கல்லூரி மாணவர்களுக்குப் பரிசு வழங்க ஏற்பாடும் செய்திருக்கிறீர்கள். கல்வி அபிவிருத்தியிலும், கலை அபிவிருத்தியிலும் தாங்கள் பெரும் பொருள் செலவிட்டிருப்பதும், இராஜதானிக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, விவேகானந்தா கல்லூரிகளிலும், இதர பாடசாலைகளிலும் ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளமும், பாடசாலைகளுக்கு நன்கொடைகளும் உதவிவரும் தங்கள் உதார குணமானது பொதுநலத் தொண்டர்களுக்கு நல்ல எடுத்துக்காட்டாகும் என மகிழ்வுடன் கூறுகிறோம். சென்னை தேசீய பெண் கலாசாலைக்கு பூஜா மண்டபம் ரூபாய் 5000/- செலவில் கட்டிக்கொடுத்திருப்பது தங்களது தமிழ் அபிவிருத்தியிலுள்ள அக்கரையையும் பெண்கள் முன்னேற்றத்திலுள்ள ஆர்வத்தையும் தெரிவிக்கிறது.

சென்னை நீதி நிர்வாகத்தில் தலைசிறந்து விளங்கும் **ஷெரீப்** பதவி வகித்து உயர்நீதி மன்றத்தில் நீதிபதிகளுடன் தாங்களும் அமர்ந்து ஒருதலைப்பக்ஷமின்றி பொதுநல நோக்கத்துடன் தாங்கள் நீதிபரிபாலனம் செய்துவந்ததை நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம்.

சமரச நோக்கத்திற் சிறந்த மனப்பண்பு கொண்டுள்ள தர்மசீலரே! வருக! வருக!

நட்டின் முன்னேற்றத்திற்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் சமய அறிவு இன்றியமையாதது. அதிலும் சமரச நோக்கத்துடன் சமயம் பின்பற்றப்படவேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் தாங்கள் தியாகராயநகரில் திருப்பணி செய்தும், கும்பாபிஷேகம் நடத்தியும் சிவ-விஷ்ணு சமரச ஆலய நிர்வாகத்தின் தலைவராக இருந்து தெய்வத் திருப்பணி

இயற்றியதல்லாமல் ஆண்டுதோறும் திருவிழாச் சிறப்புகள் விமரிசையாய்த் தங்களால் நடத்தப்படுவதைப் பாராட்டுகிறோம். எம்மதமும் சம்மதம் என்ற உயர்ந்த கொள்கையைத் தங்கள் வாழ்க்கையில் நடத்திக்காட்டுவது எங்களுக்கு அளவிலா ஆனந்தத்தைக் கொடுக்கிறது.

ஹரிஜன முன்னேற்றத்தில் ஆர்வமுள்ள பெரியோரே!
வருக! வருக!

மனிதன் மனிதனை ஒடுக்குவது, அடக்குவது அடாத காரியம் என்ற பேருண்மையை நிலைநாட்டுவதற்காகத் தாங்கள் செய்துள்ள சேவைகள் பற்பல. கோடம்பாக்கம் ஹரிஜனப் பள்ளிக்கூடத்திற்குப் பெரும் பொருள் உதவி செய்திருக்கிறீர்கள். ஹரிஜன முன்னேற்றத்திற்காக மகாத்மா காந்தி அடிகள் தென்னாட்டிற்கு விஜயம் செய்திருந்தபோது மகாத்மா வரவேற்புக் கமிட்டியில் பொக்கிஷதாரராயிருந்து பெரும் பொருள் திரட்டி இத்தேச சேவையைச் சிறப்புடன் செய்த பெருமை தங்களைச் சார்ந்திருக்கிறது. இதனை அறிந்து நாங்கள் தங்கள் தேச சேவையைப் பாராட்டுகிறோம்.

வாணிபத்துறையில் சிறப்புடன் மேலோங்கும்
பரோபகாரியே! வருக! வருக!

தேச முன்னேற்றத்திற்கு வியாபார அபிவிருத்தி அவசியம். வியாபாரத்தில் மேலோங்காத தேசத்தின் செல்வம் நன்றாகயிருக்கமுடியாது. நம்தேசீயச்செல்வத்தை வளர்த்துப் பெருக்கத் தாங்கள் "ராம்லால்" என்ற கம்பெனியைத் தொடங்கி அதை உன்னதப் பதவியில் அமைத்துள்ள பெருமை தங்களைச்சார்ந்தது. கைத்தொழில் அபிவிருத்தி, மில் தொழில் அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி ஆகிய தேசத்தின் முக்கிய தொழில் துறைகளில் தோன்றும் கம்பெனிகளுக்கு வேண்டிய ஆக்கமும், ஊக்கமும் அளித்து பங்குகள் சேர்ப்பதற்கு பேருபகாரியாயிருந்து நம் நாட்டின் தொழில் அபிவிருத்திக்கு அரும்

பெரும் சேவை செய்துவருகிறீர்கள். M. S. M. ரயில்வேயில் அட்வைசரி கமிட்டி மெம்பராகவும், சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகக் கமிட்டி மெம்பராகவும், சென்னை காஸ்மோபாலிடன் கிளப் நிர்வாக அங்கத்தினராகவும், மற்றும் பொறுப்புள்ள பதவிகளை வகித்தும் நம் நாட்டிற்கு அரும் பணி ஆற்றிவருவதைப் பாராட்டுகிறோம். தாங்கள் கோவை C. S. & W. மில்ஸ் வைரவிழாவின் தலைவராக இருந்து, அவ்வைபவத்தை சிறப்பாக நடத்திக்கொடுத்ததை மிகவும் பாராட்டுகிறோம்.

மக்களின் மனதைக்கவர்ந்த பெருந்தகையே !

வருக ! வருக !

மக்களுடைய மனதைக்கவர்ந்து அவரவர்கள் மனப் பண்பின்படி நடந்து நல்ல மனிதர் என்ற பெயரைத் தங்களது இடைவிடா உழைப்பினாலும், நேர்மையான நடத்தையினாலும் தாங்கள் பெற்று வருகிறீர்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சிறப்பாக எதிர்காலத் தலைவர்களாக வரப்போகும் இளைஞர்களின் முன்னேற்றத்தை அகத்திற்கொண்டு பொது மக்களுடைய அன்பின் கூட்டுறவாலும் தங்களுடைய பண்பட்ட அறிவின் திறத்தாலும் இப்பொழுதிருக்கும் நெருக்கடிகளைக் களையும் சக்தி தங்களுக்கும் தங்கள் குடும்பத்தாருக்கும் மேன்மேலும் பெருக விரும்பும்,

கோயமுத்தூர்
16—12—1948

தங்கள் அன்புள்ள,

கோவை நகரவாசிகள்.

திரு T. A. இராமலிங்கம் செட்டியார்

சகோதர சகோதரிகளே!

நாம் இன்று நம்மவர்களில் முன்னேற்றம் அடையக்கூடிய வழிகளிலே நமக்கு வழிகாட்டக்கூடியவராக ஒருவர் இங்கே வந்திருப்பவரை உபசரிப்பதற்காக இங்கே கூடியிருக்கிறோம். அவரைப்பற்றியும் அவர் செய்திருக்கும் வேலைகளைப் பற்றியும் இப்பொழுது அட்ரஸ் வாசித்ததிலிருந்து உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அந்த அட்ரஸ் எவ்வளவு நீளமாக இருந்ததென்றும் எவ்வளவு விஷயங்களிலே நம்முடைய விருந்தினர் கலந்துகொண்டு நம்முடைய தேசத்துக்கு முன்னேற்றம் அடைவதற்காக பாடுபட்டிருக்கிறார் என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். இதற்கு முன்னமேயே அநேகமாக எல்லோருக்கும் தெரியும். இப்போது இந்த வரவேற்புப் பத்திரமானது உங்களுக்கு அந்த விஷயங்களை ஒரு சேர ஞாபகப்படுத்தியிருக்கலாம். அவர் நெடுங்காலமாக பல துறைகளிலே வேலை செய்து நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காகவும் நம் ஜனங்களின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டிருக்கிறார் என்று பல துறைகளைப்பற்றி சொன்னார்கள். ஆனால் இப்போது அவர் புதிதாக ஒரு பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார். அதாவது சென்னையைச் சீர்படுத்துவதற்காக அதன் பரிபாலன வேலையை இப்போது ஏற்றுக்கொண்டிருக்கிறார். நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. நம்முடைய பட்டணங்களெல்லாம் எவ்வளவு கெட்ட நிலைமையில் இருக்கிறது என்பது ஒவ்வொருவருக்குந் தெரியும். நாம் இந்தக் கட்டிடத்தை விட்டு வெளியே போனால் உடனே ரோடுகளிலிருக்கிற சமாசாரமும் மற்ற தெருக்களிலுள்ள சமாசாரங்களும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது பட்டணத்திற்குப் போவீர்களானால் இதைவிட இன்னும் அதிகமான மோசமான நிலையில் இருக்கிறது என்று தெரியும் உங்களுக்கு. அந்தப் பட்டணத்தினுடைய நிலைமையைச் சீர்படுத்தவேண்டியதும் அது மேல் நாட்டிலே

இருக்கக்கூடிய பட்டணங்களைப் போல அவ்வளவு நல்ல ஸ்திதியில் இருக்கிறது என்ற பெயரை அதற்கு வருவிக்கவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது அவர்களுடைய பொறுப் பாகும். அது சாதாரண வேலையல்ல. நான் ஒருகாலத் திலே சொன்னேன் மந்திரி பதவி பெரிதல்ல; முதல் மந்திரி பதவி பெரிதல்ல; சென்னைமா நகரத்திற்கு கமிஷனராக இருப்பதுதான் பெரும் பதவி இந்த இராஜதானியிலே என்று. அந்த மாதிரியாக இருக்கப்பட்ட பரிபாலன வேலையிலே இப்போது அவர் தலைமை கொண்டிருக்கிறார். அதிலே இதுவரை ஒருவிதமான கஷ்டமிருந்தது. மேயர் என்று நியமிக்கப்பட்டவர்கள் ஒவ்வொரு வருஷம் இருந்தார்கள். அந்த ஒரு வருஷத்துக்குள்ளே அவர்கள் நினைத்த காரியங்களை முடிக்க முடியாமலிருந்தது. இப்போது அந்த காலத்தை அதிகப்படுத்துவதற்காக முயற்சி நடக்கிறது. அநேகமாக நம்முடைய நாயுடுகாரு அவர்கள் மூன்று வருஷம் அந்த மேயர் வேலையை ஏற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கும் என்று நினைக்கிறேன். அப்படி ஏற்றுக்கொள்ளும் பட்சத் திலே அவர் அந்த மூன்று வருஷத்திலே அநேக விதமாக நம்முடைய பட்டணத்தை சீர்பெறச் செய்யவும் அதை நான் முன்னே சொன்னபடியாக மேல்நாட்டிலிருக்கப்பட்ட பட்டிணங்களோடு ஒப்பிடக் கூடியதாக இருக்கச் செய்யவும். அவருக்கு அந்த பொறுப்பு ஏற்படும். அதை அவர் சீர் பெற நடத்துவார் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. நான் சொல்லிக்கொள்ளுவதெல்லாம் அவர் இப்போது ஏற்றுக்கொண்டிருக்கின்ற வேலையானது ரொம்பவும் பொறுப்பான காரியம்.

நாம் நினைக்கிறோம் சேர்மன் என்றோ அல்லது பிரசிடெண்ட் என்றோ ஒருவரை நியமித்துவிட்டால் அவர் வேலையெல்லாம் மரியாதைக்காக ஏற்பட்ட வேலையே அல்லாமல் அவர் செய்யக்கூடிய வேலையல்ல என்று. அப்படி நினைப்பது தப்பு. அந்த மாதிரியாக இருக்கவும் கூடாது. சென்னையில் இருக்கப்பட்ட மேயர்களும்

முன்னே இருந்தவர்களும் தங்களால் கூடிய வரை ஏதோ ஒன்றிரண்டு விஷயங்களைச் செய்ய பிரயத்தனம் செய்திருக்கிறார்கள். அந்த மாதிரியாகச் செய்தும் முடித்திருக்கிறார்கள். இப்போது தம்முடைய பெருத்த அநுபவத்தையும் தனக்கு தெரிந்த விஷயங்களையும் கொண்டு அவருக்கு விசேஷமாக பொருளாதார விஷயங்களிலிருக்கப்பட்ட அநுபவத்தை இதிலேயும் உபயோகப் படுத்தி நம்முடைய பட்டணமானது நல்ல நிலைமைக்கு வரச் செய்யவேண்டியது அவருடைய பொறுப்பாகும். ஜல வசதி இல்லை; மற்றும் அநேக விஷயங்களில் ரோடுகளெல்லாம் மோசமாக இருக்கிறது; ஜனங்கள் ஒதுங்குவதற்குக் கூட இடமில்லாமல் அங்கங்கே குப்பைகள் மலிந்திருக்கிறது; எங்கே பார்த்தாலும் நாற்றமடிக்கிறது; குடிக்கிற ஜலம் கூட நாற்றமடிக்கிறது என்று எல்லாவிதமாகவும் பட்டணத்தைப் பற்றி சொல்லுகிறார்கள். அவைகளையெல்லாம் கவனித்து அவைகளையெல்லாம் சரிப்படுத்தி அவைகளை, பட்டணத்தை, ஜனங்கள் போய் விரும்பி அங்கே குடியிருக்கக் கூடியதாகவும் அதை அநுபவிக்கக் கூடியதாகவும் செய்யவேண்டியது அவருடைய பொறுப்பாகும். அவர் அதற்குத் தகுந்தவர், லாயக்குள்ளவர். ஆகையினாலே அவர் அந்த மாதிரியாக நம்முடைய பட்டணத்தை மேன்மையடைய அவர் இருக்கக்கூடிய மூன்று வருஷத்திலே செய்வாரென்றும் அதற்குப் பின்னர் அவர் மற்ற விவகாரங்களிலே புகுந்து நம்முடைய தேசத்திற்கு முன்னேற்றத்தைச் செய்யுமாறும் கடவுள் அனுக்கிரகம் பண்ணுவாராக!

சென்னை நகர மேயர்

உயர்திரு S. இராமசாமி நாயுடு

16—12—48ல் கோவையில் அளித்த வரவேற்பிற்குப் பதில்

அறிவுநிறைந்த அவைத் தலைவர் அவர்களே! அன்புநிறைந்த கோவை பெருமக்களே!!

இன்று மாலை சென்னை மேயராகத் தேர்ந்தெடுத்ததைக் குறித்து என்னைப் பாராட்டுவதற்காக இந்த மகத்தான பெரும் விழாவை நீங்களெல்லோரும் கூட்டி ஒரு முகமான மனத்துடன் எனக்கு ஆசி கூறவேண்டுமென்ற எண்ணத்துடன் என்னைப் பெருமைப்படுத்திய உங்களுக்கு என்னுடைய மட்டில்லாத மகிழ்ச்சியையும் உண்மையான நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்று எனக்கு வாசித்து அளிக்கப்பெற்ற இந்த வரவேற்புப் பத்திரத்தில் பலபட புகழ்ந்து ஒரு பெரியதாள் ஒன்றை எனக்கு அளித்திருக்கின்றார்கள். இதில் ஆரம்பமுதல் இன்றைய நிலை வரை என்னுடைய சரித்திரத்தின் வரலாற்றை எல்லாம் ஒருவாறாகக் குறித்திருக்கிறார்கள் என்று கொள்ளுவதா! அல்லது என்னை உயர்வு வளர்ச்சி அணியிலே அலங்கார முறைப்பற்றி அலங்காரமாக கூறியிருக்கின்றார்கள் என்று கருதுவதா! என்பதைப் பற்றி எனக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தபோதிலும் ஏதோ மன்னர்கள் வம்சத்தில் உதித்தவன் என்ற மாண்பை எனக்குத் தந்து அந்த வழிவழியாக வந்தவன் என்ற ஒரு பெருமையை அவர்கள் எடுத்து உங்கள் பால் உணர்த்தினார்கள் என்றால் அன்று தமிழ்நாட்டிலே நாயக்கர் ஆண்ட ஒரு முறையிலே மிளிர்ந்து நின்ற விழுப்பம் மிகுந்த புனிதமான ஒரு சேவையின் தன்மையில் ஆயிரத்தில் ஒரு பங்காவது செய்வதற்கு எனக்கு ஏற்றம் கிடைத்தால், தருணம் கிடைத்தால் அதையே நான் பெரிதாகக் கொள்ளுவேன் என்று உங்கள்பால் மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதுமட்டுமல்லாமல், தமிழ் நாட்டிலே தமிழ் மக்களாகப் பிறந்தவர்களுடைய உண்மையான வாழ்வு என்னவென்றால் தம்மிடையே வந்த எவராக இருந்தாலும்

அவரிடத்திலே இருந்த தனித்த அருமையான குணங்களைப் போற்றி புகழ்வது வழக்கம். அத்தகைய மரபை அவாகள் கொண்டிருந்தார்கள். அத்தகைய இயல்பை அவர்கள் கடைப்பிடித்து ஒழுகினார்கள். அதை மற்றவர்களிடத்திலும் எடுத்துக் காட்டினார்கள் அன்று வாழ்ந்த தமிழர்கள். ஆனால் இன்றைய நாட்களிலே இப்பொழுது வாழும் தமிழர்கள் எந்தவிதமான முறை பற்றி அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் என்ற ஒரு தன்மையை நான் உங்களுக்கு உணர்த்திக் காட்ட விரும்புகின்றேன். என்னைப் பொருத்த அளவிலே எனக்கு இவ்வாறு பலபட புகழ்ந்து என்னைப் பெருமைப் பாராட்டித் தந்த இந்த வரவேற்புத்தாளுக்கு நான் கொள்ளுவது என்னவென்றால் எனக்கு இத்தகைய உண்மையான அடைமொழிகளெல்லாம் கொடுத்து அழைப் பதற்கு வேண்டிய முறைகளைப் பின்பற்றக் கூடியவனாக நான் இல்லாது போயினும், இவைகளுக்கு இலக்காக என்னை ஆக்கிக் கொள்ள வேண்டிய ஒரு பெருமையான ஒரு பாரமானது என்னைச் சுமந்து நிற்கின்றது என்றுதான் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் அது ஒரு பெருத்த பாரமாக இருக்கும் என்பதை நான் நன்றாக அறிவேன். அவைகளை எல்லாம் எவ்வாறு நான் ஆக்கிக்கொள்வது அவைகளுக்கு இலக்காக நான் இப்போது எப்படி நிற்கமுடியும் என்ற ஏக்கமானது என்னை ஒருவாறு பீடித்து நிற்கின்றது என்பதையும் நான் ஒருவாறு கூற விரும்புகிறேன். இவைகளெல்லாம் ஒருபுற மிருக்கட் டும். ஆனாலும் நீங்கள் அன்புடனும் ஆதரவுடனும் உண்மையான ஆசி மொழிகள் தந்த ஓர் முறையை ஏற்று உங்கள் நல்லெண்ணமும் ஆசியும் எனக்குத் துணை யாக நின்று நான் எடுத்துக்கொண்ட காரியத்தில் வெற்றி பெறக்கூடிய ஒரு சிறந்த பண்பினை பெறுவேன் என்பதை நான் உறுதியாகக் கொண்டு நிற்கின்றேன் என்பதையும் நான் கூற விரும்புகின்றேன்.

நண்பர்களே மற்றும் இங்கு குறிக்கப்பட்டுள்ள பெரிய வரலாற்றின் நோக்கங்களைக்கண்டால் இதில் உள்ளதையே

மீண்டும் படித்துவிட்டால் மக்கள் என்ன தொண்டு செய்ய வேண்டும் அல்லது எந்தவிதமான முறையிலே தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவேண்டும் என்று அதுவே முடிவைக்கட்டிவிடும் என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும் கொடுத்த மரியாதைக்கு பதில் உரைக்கவேண்டியது என் கடமையாக இருப்பதால் எனக்குத் தெரிந்த ஒரு சில விஷயங்களை மட்டும் நான் கூற விரும்புகிறேன். சென்னை மேயர் என்ற ஒரு பெரிய பதவியினாலே மகத்தான காரியத்தை ஒரு தனிப்பட்ட மனிதன் சாதித்து விடமுடியாது என்பதை நான் உங்களுக்குச் சொல்லவிரும்புகிறேன். ஏனென்றால் அங்கு நிறுவி இருக்கப்பட்ட முறையிலே வந்து அமைந்திருக்கக் கூடிய நகராண்மைக் கழக அங்கத்தினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒருமனப்புட்ட கருத்துடன் அவர்கள் தொண்டு செய்வார்களேயானால் எனக்கு அந்தப் பெருமையானது கிடைக்கும். இன்று காலையிலே நான் மற்றொரு இடத்திலே நிகழ்த்திய ஒரு சொற்பொழிவிலே என்ன குறித்தேன் என்றால், அவர்களுடைய உண்மையான ஆதரவும் அவர்களுடைய சிறந்த உதவியும் எனக்கு கிடைத்தாலன்றி அந்தப் பெருமையானது எனக்குக் கிடைக்காது. சென்னை முனிசிபல் ஆக்டின் சட்டத்தின் கீழே அவர்களுக்குத்தான் விசேஷ அதிகாரமானது கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நான் அதிகாரம் விரும்புகிறேன் என்று கூறவில்லை. இருந்தாலும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கிலத்திலே "City Father" என்று சொல்வதற்கு தமிழிலே இன்று கையாளப்படக்கூடிய ஒருமொழி பெயர்ப்பானது "நகரத் தந்தை" என்று கூறுகிறார்கள். அவர்கள் அந்த உண்மையிலேயே நகரத் தந்தையாக ஆவதற்கு இருந்தார்களேயானால் அவர்களுடைய அபிமானப் புத்திரனாகத்தான் என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்றுதான் நான் கூறவிரும்புகிறேன்.

ஆகவே, அணைப்பதோ அல்லது எனக்கு ஆதரவு கூறுவதோ; அறிவு புகட்டுவதோ அது அவர்களுடைய கடமை என்றுதான் நான் சொல்லமுடியும். ஆகவே அவர்

கள்தான் என்னை நல்வழிபடுத்தி எடுத்துக்கொண்ட காரியங்கள் அனைத்திலும், வெற்றிபெறக் கூடிய நிலையைச் செய்யவேண்டுவது அவர்களுடைய பொறுப்பாக இருந்தாலும் அவர்களுடன் கலந்து உழைக்கக்கூடிய முறையிலே நான் பாடுபடுவேன்; முயற்சி செய்வேன் என்பது ஒருதலை.

அது மட்டுமல்லாமல் நகர சபையில் உள்ள ஒரு மேயர் எடுத்துக்கொண்ட சில திட்டங்களுக்கெல்லாம் நல்லது செய்யவேண்டுமானால் அவர்களுடைய பூரண ஒத்துழைப்பு அவசியம். அவர்களுடைய உதவியில்லாமல் எந்தக் காரியத்தையும் செய்வதற்கு முடியாது. ஆனால், குறிப்பாக ஒரு பெருத்த வேலையிருக்கின்றது. அது என்னவென்றால் நாள்தோறும் பல கடிதங்களையெல்லாம் அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டியதாயிருக்கிறது. அதிலே படித்துணர்ந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் பலவாராக இருக்கின்றன. அதில் அரசாங்கத்திற்கும் மற்றைய கவுன்சிலர்களுக்கும் இடையிலே தொடர்பாக நிற்கக்கூடிய ஒரு தனி மனிதன் மேயர் ஒருவன். அந்த மேயரைத்தான் மற்ற பொறுப்பான வேலைகள் எல்லாம் கடித வாயிலாகச் சுமத்தப்பட்டிருக்கிறதேயல்லாது அதிலே தமது அதிகாரத்தைப் பூரணமாக செலுத்துவதற்கோ அல்லது தமக்கு கிடைத்த அறிவையோ ஆற்றலையோ உபயோகப்படுத்தி வேறு வழியிலே அதிகமாக திருப்பிக்கொள்வதற்கு இடமில்லை என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நகர சபையில் இன்று இருக்கக்கூடிய நிலையில் பட்டணம் எவ்வாறு சீர்கெட்டுக் கிடக்கின்றது; அதை எவ்வாறு அமைத்தல் வேண்டும், அதை நல்ல முறையில் மக்களெல்லாம் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய தன்மையிலே நல்ல குடிதண்ணீர் வேண்டும், மற்றும் பல வசதிகளெல்லாம் வெண்டும் என்று நமது தலைவர் இராமலிங்கம் செட்டியார் அவர்கள் அழகாக எடுத்துரைத்தார்கள். அது உண்மை தான்! ஆனால் அதை செய்வதற்கு வேண்டிய வருவாயானது சென்னைமாநகரத்தில் இன்று இல்லை என்று நான் கூறவிரும்புகிறேன்.

சென்னை நகர சபையின் வருவாய் ஒரு கோடியே எழுபத்தைந்து லட்ச ரூபாய்கள் ஆண்டு தோறும் கிடைக்கிறது. அதிலே மாதமொன்றுக்கு ஏழு லட்ச ரூபாய்கள் சம்பள பட்டுவாடா செய்யவேண்டியதாயிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் முன்னாலே அரசாங்கத்திலிருந்து வாங்கிய கடனிருக்கின்றதே அந்த கடனுக்காக ஈடு செய்வதற்காக ஆண்டுதோறும் 24 லட்ச ரூபாய்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது. இது தவிற கல்வியின் முறையிலே 28 லட்சங்கள் நகர சபையின் மூலமாக சென்னையிலுள்ள மாணவர்களுக்கெல்லாம் அவர்கள் செலவழிக்க வேண்டியிருக்கிறது. எஞ்சியுள்ள பணத்தை நீங்களெல்லோரும் நல்ல வியாபாரிகள், அநுபவம் முதிர்ந்தவர்கள் நீங்கள் தெரிந்து கொள்ளலாம். எஞ்சியுள்ள லட்சங்கள் எத்தனை, அந்த லட்சங்களைக் கொண்டு நாம் எந்த இலட்சியத்தை நிறைவேற்றலாம் என்பதையெல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆனால் இப்பொழுது இந்த நிலையிலே அங்குள்ள மக்களெல்லாம் வரிகொடுக்கக்கூடிய மக்கள் அனைவரும் கிளர்ச்சிகள் பலவாறாக செய்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் நகரசபைக் கழகத்தில் அங்கத்தினர்களாக வந்து அமர்ந்திருப்பவர்களிலும் ஒரு சிலர் என்னைப்போல நகர சபையிலே அநுபவமில்லாது முதன் முதலாக நகரசபையை எட்டிப்பார்க்கும்படியான ஒருதன்மை வாய்ந்தவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் இத்தகைய வரியானது பெருவாரியாக இருக்கின்றது; பளுவாக இருக்கின்றது; அவைகளையெல்லாம் குறைக்கவேண்டும்; அதற்கு வேண்டிய முறைகளையெல்லாம் கையாளவேண்டுமென்று இப்பொழுதே தனிப்பட்ட முறையிலே தங்களுடைய பிரசங்கங்களிலே ஒருவாறு அதை உணர்த்திக்கூறி கூக்குரலிடுவதற்கும் ஆரம்பித்துவிட்டார்கள். ஓரிருவர் சத்தியாக்கிரகப் போராட்டத்தைக்கூட நாங்கள் ஆரம்பித்துவிடுவோம் என்ற அளவிலே அவர்கள் சொல்வதற்கு முற்பட்டார்கள். அப்பொழுது நல்ல வேளையாக அவர்கள்பால் நானும்

கலந்து அந்த கூட்டங்களிலே பங்கெடுத்துக்கொள்ள வேண்டிய ஒரு தருணம் கிடைத்ததினால் அவர்களுக்கு அவர்களுடைய பொறுப்பை உணர்த்திக்காட்டி, அய்ய! நீங்கள் பேசுவது அவ்வளவு பொருத்தமில்லை! அழகில்லை; உங்களுடைய ஆக்கவேலைகள் பல இருக்கின்றன. இன்று நீங்கள் நகரசபை வருவாயை எவ்வாறு பெருக்கலாம் என்று அதற்கு வேண்டிய முறையைக் கையாளவேண்டியது உங்களுடைய பொறுப்பேயன்றி நீங்களும் சேர்ந்துகொண்டு பொதுமக்களுடைய ஒரு கிளர்ச்சியிலே ஈடுபட்டு அவர்களுடைய அறிவிற்கு உகந்த முறையிலே ஆவன செய்வோம் என்பதைச் சொல்லாது அவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டிய வழிகளைக் காணாது, இவ்வாறு கூறுவது நியாயமில்லை என்று ஒருவாறு தடுத்தேன். ஏனென்றால் இதை எதற்காக நான் உங்கள்பால் கூறுகின்றேன் என்றால் அவர்களுடைய மனப்பான்மை எவ்வாறு இருக்கின்றது. அவர்கள் நகரசபையில் வந்தவுடன் நகரசபையினுடைய சட்டதிட்டங்களென்ன? இதற்கு முன்னாலிருந்த மேயர்கள் எவ்வாறு கையாண்டுவந்தார்கள்? அதற்கு முன்னால் "பட்டினியால் வாடியிருந்த மக்களுக்கெல்லாம் நல்ல உதவி செய்வதற்காக நாங்கள் முற்படுவோம்" என்ற ஒரு ஸ்லோகத்தை பாடிவிடுகின்றார்கள். இதில் பெருமையொன்றுமில்லை. இவர்கள் செய்தது யாது? செய்வது என்ன? செய்யப்போவது எப்படி? என்றெல்லாம் கேள்விகள் கேட்கின்றார்கள், இவைகள் அனைத்துக்கும் ஒரே ஒரு பதில்தான் நான் கூற விரும்புகின்றேன். நகர சபையின் வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கு வேண்டிய முறைகளை நாங்கள் செய்துகொள்ளாவிட்டால் எந்தவிதமான முறையும் செய்வதற்கு முடியவே முடியாது. தண்ணீர் குடிப்பதற்கு நல்ல தண்ணீராகக் கிடைப்பதற்கு வசதி கிடைக்கவேண்டுமேயென்று தலைவர் குறிப்பிட்டார்கள். ஆனால் அங்கு நாங்கள் இயற்கையை எதிர்பார்த்து நிற்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். நீங்களெல்லாம் அதிர்ஷ்டசாலிகள் குடிதண்ணீர் அளவிலே! மற்றைய அளவிலே நகரசபைக்கு சென்னைமாநகரம் எவ்வாறு

நிகழ்கின்றதோ அல்லது இன்று இருக்கக்கூடிய நிலையிலே அது காணப்படுகின்றதோ அந்த நிலைக்கு எவ்வாறும் நீங்கள் மேம்பட்டவராக இல்லை என்பதை மட்டும் நான் உங்களுக்கு சொல்ல விரும்புகின்றேன். ஏனென்றால் நானும் இந்த இரண்டு நாட்களுக்குள்ளாக நமது கோவை நகரத்தை சுற்றிப் பார்க்கும்படியான ஒரு பேறு கிடைத்தது. சாக்கடையின் திரம் அதைக்காட்டிலும் அதிகமாகத்தான் ஏற்றத்துடன் விளங்கியது. அதுமட்டுமல்லாமல் பல தெருக்கள் எவ்வாறு படுகுழிகளாக நிறைந்து நிற்கப் பெற்றனவோ அதைக்காட்டிலும் அழகான முறையிலே ஆழமாகப் பதிந்து கிடந்தன என்று நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இதுமட்டுமல்லாமல் 'ரேஸ் கோர்ஸ்' ரோடு முதலிய இந்த பகுதிகளல்லாமல் மற்ற பகுதிகளிலே சென்றால் வானளாவி ஓங்கி பரந்து கிடக்கக் கூடிய தூசியின் மாண்பினைக்கண்டு நான் மிக மிக உணர்ந்தேன், அறிந்தேன். ஆகவே அந்த அளவிலே நாம் இருவரும் ஒருமனப்பட்டவர்களாகத்தான் இருக்கின்றோம்; ஒத்தவர்களாகத்தான் இருக்கின்றோம். எந்த வழியிலுமே மேம்பட்டவர்களாக இல்லை. ஆனால் குடிதண்ணீரில் நீங்கள் மேம்பட்டவர்கள். அங்கு சென்னைமா நகரத்தில் இயற்கையோடு நாங்கள் போராடவேண்டியதாக இருக்கின்றது என்று நான் கூறினால் அங்கு எனக்கு முன்னால் இருந்த அறிவாளிகள், நல்ல அறிவு பெற்றவர்களெல்லோரும் பல திறப்பட்ட கருத்துக்களையெல்லாம் தமக்கு கிடைத்த அநுபவத்தையெல்லாம் நல்ல வழியில் உபயோகப்படுத்தி அங்கு ஆக்கவேலைகள் செய்திருக்கின்றார்கள் தண்ணீர் திட்டங்களை அமைத்திருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் அதில் வெற்றிபெறுவதற்கு அதிகமாக இல்லை. அது ஒரு பெரிய குறைதான். Catchment area (காட்ச்மன்ட் ஏரியா) என்று சொல்லக்கூடிய அளவிலே மழை பெய்தால் அங்கு தண்ணீர் சேகரிக்கக்கூடிய ஒரு திட்டத்திலே தேக்கமானது ஏற்படலாம், இல்லாவிட்டால் தண்ணீர் குறைவாகத்தான் இருக்கின்றது.

இன்று இரண்டாவது வாய்க்காலை வகுத்திருக்கின்றோம். 65 லட்ச ரூபாய்கள் வரையிலும் இந்த சென்னை நகர சபையானது செலவழித்திருக்கிறது. அதை இன்றும் நாங்கள் துவக்கம் செய்யவில்லை, ஆனால் துவக்கம் செய்யவேண்டுமானால் அதற்கு வேண்டிய தண்ணீர் அங்கு இல்லை. தண்ணீர் இருந்தாலல்லவா வாய்க்கால் வழியோடி மற்றவர்களுக்கும் அது கொடுப்பதற்கு ஏற்ற நிலையிலிருக்கும். செலவழித்த பணங்கள் பலவாறு பல லட்சங்கள். ஆனால் ஏன் இதற்கு அமெரிக்கா முதலிய தேசங்களிலுள்ள என்ஜினியர் அதாவது அறிவுத் துறையிலே மேம்பட்ட என்ஜினியர்களெல்லாம் இருக்கும் நிலையிலே அவர்களுடன் கலந்து எவ்வாறு நாம் நல்ல தண்ணீரை எப்போதுமே மக்களுக்கு கிடைக்கும்படி செய்யலாம் என்று அவர்கள் சிந்தனை செய்தார்களில்லை என்று நான் சொன்னால் அது அவர்களை நான் குறை கூறுவதாக இல்லை. ஏனோ அவர்கள் அந்தத் திட்டத்தை யெல்லாம் அவ்வாறு வகுப்பதற்கு முற்படவில்லை என்றுதான் நான் கருதுகின்றேன். ஆனால் இங்கு உங்களுடைய தண்ணீர்த் திட்டத்தை நோக்குங்காலத்தில் திவான்பகதூர் இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் நமது மனித சமுதாயம் கோவைமாநகரிலே நின்று நிலவும் வரையிலே அவர்களுடை பெயரைச் சொல்லக்கூடிய அளவிலே ஒரு பெரிய மகா அதிர்ஷ்டத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இந்த அழியாப்புகழுக்கு அவர்கள் எத்தனை தவம் கிடந்தார்களோ! அவர்களுடைய மூதாதையர்கள் என்னென்னவிதமான புண்ணியம் செய்திருக்கின்றார்களோ! அல்லது இத்தகைய ஒரு புதல்வனை பெறுவதற்கு இவர்களுடைய தாய் தந்தையர்கள் தான் எத்தகைய நோன்புகள் நூற்றார்களோ! நான் அறியேன்! அவ்வளவு அருமையான முறையிலே 25 மைல்கள் வரையிலும் மலைகளையும் குடைந்து சென்று துருவித் துருவிப் பார்த்து நல்ல முறையிலே தண்ணீர் கொண்டுவருவதற்கு வேண்டிய ஒரு திட்டத்தை அமைத்துச் சென்றார்கள் என்றால் அது போற்றுதற்குரியதுதான். அதுமட்டுமல்லாமல் இங்கு கிடைக்கக்கூடிய தண்ணீர் இருக்கின்றதே

நல்ல பரிசுத்தமான தண்ணீர். செங்கற்பட்டிலே பாலாற்றிலே கிடைக்கக்கூடிய தண்ணீர் வசதியும் நன்றாயிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் உலகத்திலே நல்ல தண்ணீர் கிடைக்கக்கூடிய ஒரு பெரிய திட்டமானது கோவையிலே அமைந்திருக்கிறது என்று பல அறிஞர்கள் கூற நான் கேட்டிருக்கின்றேன். நானும் சுவைத்துப் பார்த்ததிலிருந்து இதற்கு நிகராக எந்த ஒரு தண்ணீரையும் பனிநீருக்கு மேலாகச் சொல்லக்கூடிய நிலையிலே அவ்வளவு புனிதத் தன்மை வாய்ந்த ஒரு நிலையில் இருக்கின்றது என்று சொன்னால் அது கோவை வாசிகளினுடைய புண்ணிய வசத்தினாலோ அல்லது அவர்கள் நல்லமக்கள் என்ற ஒரு காரணத்தினாலோ இவ்வாறு அமைந்திருக்கிறது என்றும் நான் கூறவேண்டியதாக இருக்கின்றது. நண்பர்களே இந்தமாதிரி ஒரு அருமையான திட்டத்தை அங்கு தயாரிப்பதற்கு இனிமேல் ஆக்கவேலைகள் செய்தல் வேண்டும். 65 லட்ச ரூபாய்கள் இந்த இரண்டாவது வாய்க்கால் தண்ணீர் வழிந்து ஓடவேண்டும் என்ற நிலையிலே நாங்கள் செய்தாலும் அதில் இயற்கையை நாங்கள் எதிர் பார்த்து நிற்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று நான் உங்களுக்குக் கூறினேன். ஆனால் இதற்கு மேலாக அந்த நாற்றத்தைப் பற்றி கூறினார்களே அதை எவ்வாறு தடுக்கலாம் என்ன செய்யலாம் என்பதெல்லாம் எங்களிடையிலே உள்ள இன்ஜினீயர்களுக்குள்ளேயே கருத்து வேறுபாடுகள் பலவாராக இருக்கின்றன. ஆனால் உண்மையைக் கூறுமிடத்து நான் இன்னும் அந்த இடத்திலே சென்று பார்க்கவில்லை. பார்க்கவேண்டுமென்று சொல்லுகின்றார்கள். ஆனால் என்போன்ற ஆங்கிலத்தில் சொல்வதைப் போல் Layman என்று சொல்லுகிறார்களே, அந்த துறையிலே அதிகமான பயிற்சி பெறாத ஒரு தனி மனிதன், சென்றால் அதற்குக்கூட ஒரு திட்டத்தைக் கூறிவிடலாமோ என்றுதான் நினைக்கவேண்டியதாக இருக்கிறது. அங்கு அவர்களுக்குள்ளே வேறுபாடு. சிலர் மணலை அதிகமாக போடவேண்டுமென்று சொல்லுகின்றார்கள். மற்றவர்கள் இன்னும் பலவிதமான Chemicals ஐ சேர்க்கவேண்டு

மென்று கூறுகின்றார்கள். இவர்கள் எவரிலுமே ஒரு மனக்கருத்துடனே யாரும் செய்வாரில்லை. ஏதோ இறைவன் எங்களுக்கு அந்த தண்ணீரை யெல்லாம் கொடுத்தாலும் இன்றுவரையில் நாங்கள் உயிருடன் இருக்கின்றோம் என்பதற்கு உங்களுக்கு அத்தாட்சியிருந்தால் அதிலும் மேயரும் தலை நிமிர்ந்து பேசக்கூடிய நிலையிலே அவர் இருக்கின்றார் என்று சொன்னால், சென்னை நகர் தண்ணீரானது நாற்றமடித்தாலும் நாற்றம் என்ற பழம் பொருளிலே உண்மையான ஒரு தன்மையைக் கொண்டுதான் இருக்கின்றது என்ற பொருளைத்தான் நீங்கள் கொள்ள வேண்டும். அதில் எந்தவிதமான குற்றமுமில்லையென்றுதான் கூறுகின்றார்கள். இருந்தாலும் அந்த நாற்றத்தை நாம் ஒருவாறு தடுப்பதற்கு முற்படவேண்டிய வேலைகளிலே நாங்கள் ஈடுபட்டிருக்கின்றோம். நானும் அதற்கு ஆவன செய்யலாமென்றுதான் நினைக்கின்றேன். ஏனென்றால் நீங்கள் அனைவரும் வியாபாரிகள். சென்னைமாநகரத்தில் அதிகமான தொடர்பு வைத்துக் கொண்டிருப்பவர்கள். நீங்கள் அங்கு வருங்காலத்தில் இந்தவிதமான நல்ல தண்ணீரை உபயோகித்த பின்னர் அந்த நாற்றமடித்த தண்ணீரைக் குடித்து நீங்கள் எங்களை ஏசுதல் வேண்டாம். அந்த ஏசுதலுக்கு இடமில்லாமல் அதிவிரைவிலே நாங்கள் அதை நல்லமுறையில் மாற்றித் தருகின்றோம் என்று உங்களுக்கு ஒருவாறு வணக்கமாக தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நிற்க அங்கு நகரசபையின் வருவாயை பெருக்க வேண்டுமென்று சொன்ன ஒரு முறைபற்றி ஏழையான மக்களுக்கெல்லாம் சிறு வீடுகளெல்லாம் கட்டித்தர வேண்டுமென்று அங்கு சில திட்டங்களெல்லாம் நான் வருவதற்கு முன்பே போட்டிருக்கிறார்கள். “சேனாய் நகர்” என்ற ஒரு பெரிய திட்டத்தை ஏற்படுத்தி அங்கு நல்ல வீடுகளெல்லாம் கட்டியிருக்கின்றார்கள். அவைகளைச் சென்று நான் பார்வையிட்டேன். அவைகளில் பெரும்பாலானவைகள் நல்ல முறையில் அமையப்பெற்றிருக்கின்றன. அதுமட்டு

மல்லாமல் காரியாலயத்தில் பல அலுவலகங்களிலே வேலை செய்யக்கூடிய மக்களெல்லாம் வாழக்கூடிய தன்மையிலே சிறு சிறு வீடுகளும் பெரிய வீடுகளும் அழகாக அமையப் பெற்றிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் ஏழை தொழிலாளிகளுக்கும் பல இடங்களிலே சிறு சிறு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். கடந்த நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்கு முன்பாக நான் டெல்லிக்கு சென்றிருந்தபொழுது நம்முடைய வணக்கத்திற்கும் மதிப்பிற்கும் உரிய எனது வலதுகைப் பக்கத்தில் அமர்ந் திருக்கும் நன்பர் ஷண்முகனார் அவர்களை நான் காணும்படியான ஒரு பேறு கிடைத்தது. அவர்கள் அப்பொழுதுதான் மேலை நாட்டினை சுற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் கலந்து பேசியபோது அங்கு இருக்கக்கூடிய, இங்கிலாந்து தேசத்திலிருக்கக் கூடிய, கிளாஸ்கோ என்ற நகரத்திலேயுள்ள ஒரு பெரிய கம்பெனியுடன் அவர்கள் ஒரு ஒப்பந்தத்தை நமது இந்தியா கவர்ன்மெண்டின் சார்பாகச் செய்துவிட்டு வந்தார்கள். கையெழுத்துமிட்டும் வந்தார்கள். அந்த கம்பெனியானது இப்பொழுது டெல்லியிலே நிறுவப்பெறப் போகிறது 20 லட்சங்கள் அதனுடைய மூலதனமாக அமைக்கப்பெற்று. அந்த கம்பெனியினுடைய வேலை என்னவென்றால் Free Fabricated Houses அதாவது முதற்கடமையாக நல்லவிதமான தூண்கள் நிறைந்த புதிய முறையிலே கட்டக்கூடிய வீடுகளையெல்லாம் அமைக்க வேண்டிய சாதனங்கள் நிறைந்த ஒரு பெரிய தொழிற்சாலை. அதை, 20 லட்சங்கள் அளவிலே கொண்டுள்ள ஒரு பெரிய திட்டத்தை, டெல்லியிலே நிர்மாணம் செய்வதற்கு இப்பொழுது வேண்டிய வேலைகளெல்லாம் அன்றே அவர்கள் பூர்த்திசெய்தார்கள். இப்பொழுது அதை வந்து ஆரம்பிக்கப்போகின்றார்கள். அந்த வீடுகளெல்லாம் கட்டக் கூடிய சாதாரணமான சிறு வீடு முதல் பெரிய பணம் படைத்த முதலாளிகள் அளவிலும், அல்லது ஆடம்பர வாழ்க்கையை விரும்பக்கூடியவர்கள் அளவிலும் அதைப் பெருக்கிக்கொண்டு அழகான முறையிலே அமைக்கக்கூடிய

ஒருபெரிய சக்தி வாய்ந்த தொழிற்சாலை என்பதையும் குறிப்பிட்டார்கள். அதில் சாதாரணமான ஒரு சிறிய வீடுக்கு ரூபாய் 2400 க்குமேல் ஆகாது. அவ்விதமாக அவர்கள் செய்யலாம். அந்த ஆக்க வேலையை இப்பொழுது அவர்கள் ஆரம்பித்துவிட்டார்கள் என்று அன்றும் சொன்னார்கள் இப்பொழுதும் நான் அவர்களிடத்தில் தனிமையாகப் பேசிக்கொண்டிருக்கும்போதும் எனக்குக் குறிப்பிட்டார்கள். இதை அன்று டெல்லிமாநகரத்தில் மட்டுமல்ல மற்றும் கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய மாகாணங்களிலும் செய்யவேண்டுமென்று அவர்கள் எனக்கு வற்புறுத்திக் கூறினார்கள். அவர்களுடைய யோசனையை நான் முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளுகின்றேன். எங்களுடைய நகரசபையின் சார்பிலே அத்தகைய ஒரு சிறந்த தொழிற்சாலையை 20 லட்சங்கள் கொண்ட ஒரு மூலதனத்தைக்கொண்டு அங்கும் அதை அமைத்து ஏழை மக்களுக்கும் பணக்கார மக்களுக்கும் மற்றும் நடுத்தரமான மனிதர்களுக்கும் அந்த வீடுகளையெல்லாம் கட்டிக்கொடுக்கலாமென்று நாங்கள் முயற்சி செய்வோம். ஆனால் எங்களுக்குப் பணம் தேவை. அந்தத் தேவையை பூர்த்தி செய்துகொள்ளுவதற்கு மீண்டும் அரசாங்கத்திடம் தான் செல்லவேண்டியிருக்கிறது. அவர்களிடத்தில் வாங்கிய கடனை இன்னும் திருப்பிக் கொடுக்கக்கூடாத நிலையில் நாங்கள் இருக்கின்றோம். கடனாளிகளாகத் தான் இருக்கின்றோம். மீண்டும் கடனை எழுப்ப வேண்டியதாயிருக்கின்றது. கடனையும் பெற்றுத்தான் வருகின்றோம். இருந்தாலும் போராட்டம் சற்று அதிகமாகத்தான் இருக்கின்றது. அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய அளவிலே உள்ள ஒ 5 வட்டியைக் காட்டிலும் எங்களுக்கும் கூட சிறிது வட்டிதான் போடுகிறார்கள். அதற்குக்கூட நான் வந்தவுடன் சற்று போராட்டத்தில் ஆரம்பித்தேன். வெற்றியும் காண்பேன் என்று நினைக்கின்றேன். அதைப்போல் அவர்கள் எங்களை அநுமதித்தால் பொதுமக்களிடத்திலிருந்து இந்த நல்ல விதமான ஒரு சேவையைச் செய்வதற்கு கடன்களை

யெல்லாம் எழுப்பலாம் என்ற ஒரு எண்ணமானது எனக்கு இருக்கின்றது. அவ்விதமாகச் செய்தால் ஏழை மக்களெல்லாம் நல்ல சிறு வீடுகளையெல்லாம் அமைத்துக்கொண்டு அவர்கள் வாழ்வதற்கு முற்பட்டால் இந்த உதாரணத்தைப் பின்பற்றி இன்னும் கிராமங்களில் எல்லோரும் கிராமங்களையெல்லாம் அழகுபெறச் செய்துவிடலாம். அதற்கு வேண்டிய ஆக்கவேலைகளையெல்லாம் நாம் செய்து விடலாம் என்று நினைக்கின்றேன். ஒருவாறு அரசாங்கத் திடத்திலே நாங்கள் இத்தகைய உதவிகளையெல்லாம் எதிர்பார்த்தாலும் பொதுவாகப் பொதுமக்களுடைய ஒரு ஒத்துழைப்பானது மிக மிக அவசியமாயிருக்கின்றது. அது சென்னை நகரசபைக்குமட்டுமல்ல எல்லாவிதமான நகரங்களுக்குமே பொருத்தமாக இருக்கும். நகர மக்கள் வாழக்கூடிய இடங்களில், நல்ல வியாபாரிகள் வாழக் கூடிய இடங்களில் அதுவும் சிறிய இடங்களிலே இவ்வித மாக ஒரு சீர்கேடான நிலையிருந்தால் அதை மற்றவர் களைப்போல நான் உங்களையும் பெருமிதத்துடனே பாராட்டிச் செல்லுதல் முடியாது. நீங்கள் இதற்கு முன்னால் வழி கண்டிருக்கவேண்டும்.

இவ்வளவு அரசியல் வாதிகளையெல்லாம் கோவை தந்திருக்கிறது. நல்ல ராஜதந்திரிகளை யெல்லாம் தந்திருக் கின்றது. சிறந்த நிபுணர்கள் என்று சொல்லக்கூடிய இன்று உலகத்திலே எவருக்கும் ஒப்பிட்டுச்சொல்ல முடியாத நிலையிலே அவ்வளவு அறிவுபடைத்த ஒரு பெரிய நிதிமந்திரி யையும் இந்த கோவை ஜில்லாவானது தந்திருக்கிறது என்று சொன்னால் அதை நான் கேவலம் உபசாரவார்த்தைக்காகச் சொல்லவில்லை, அல்லது நமது நண்பர் என்பக்கத்தில் இருக்கிறார் என்பதற்காக நான் கூறவிரும்பவில்லை. நான் அவர்களிடத்தில் அதிகமாக நெருங்கிப் பழகியவனல்ல. இருந்தாலும் கடந்த பல ஆண்டுகளாக என்னுடைய தொழில் முறையிலே அவர்களுக்கும் எனக்கும் தொடர்பு உண்டு. அவர்களையறியாமலே அவர்களுடைய வஸந்தா மில்லுக்கும் எங்களுக்கும் ஒரு தொடர்பு Stock Broker என்ற முறை

யிலே ஏற்பட்டிருந்தது. 1937-ம் ஆண்டு முதல் இன்றைய வரையில் எங்களுக்குள் அந்தத் தொடர்பு இருந்துவருகிறது. இருந்தாலும் அவர்களிடத்தில் நான் தனித்த முறையிலே அவர்களை ஒரு தலைவனாக, ஏகலைவன் எவ்வாறு வணங்கு வானோ அதைப்போலவே, அவர்களை தனித்து நின்று வணங்கினேன் என்று கூற விரும்புகின்றேன். அவர்களுடன் பலசமயங்களிலே நான் கலந்து உறவாடிய காலத்திலே அவர் களுக்கு இருக்கக்கூடிய ஒரு உண்மை உணர்ச்சியும், அழகான முறையிலே பாங்குடன் எடுத்து ஓதக்கூடிய கருத்தினையும் நான் எவர்பாலும் கண்டதில்லை. இதை நான் உங்களுக்கு பெருமையாகக் கூறவில்லை. நம்மிடையே அவர்கள் வாழ்கின்றார்கள் என்ற ஒரு காரணத்தினாலே இந்த கோவை மக்களெல்லாம் அவர்களுடைய பெருமைகளை உணரா திருக்கின்றார்கள் என்றுதான் கூறவிரும்புறேன். தமிழை எடுத்துகொண்டால் சிலப்பதிகாரத்திற்கு அவர்கள் பொருள் கண்டிருக்கின்றார்கள். என்ன புனிதமான முறையில் அவர்கள் அதை எடுத்து கையாண்டிருக்கின்றார்கள். என்ன அழகான முறையிலே அது இருக்கின்றது. படிக்கப் படிக்க தெவிட்டாதிருக்கிறது அதனுடைய எளிய நடையானது. மற்றவர்களெல்லாம் புலவர் பெருமக்களாக இருக்கலாம். அறிஞர்கள் பலராகத் திகழலாம். ஆனால் அவர்களுடைய நடையை நாம் பின்பற்ற வேண்டுமேயானால் பல்லை உடைப் பது போல **மலைபடுகடாம்** என்ற முறையிலே அவர்களு டைய நடையானது மிடுக்குடன் அமையப் பெற்றிருக்குமே யல்லாது இவ்வளவு சரளமானமுறைமே சாதாரணமான முறைலே சிலப்பதிகாரம் என்ற சொல்லை உச்சரிக்கக் கூடாத நிலையிலே உள்ள ஒரு தமிழனும் அதனுடைய உண்மை பண்பினை உணர்ந்து வாசிக்கக்கூடிய ஒரு கருத்தி னைக்கொண்டு அவன் முற்படுவானென்று சொன்னால் அதைக்காட்டிலும் சிறந்த சான்றாக நான் வேறொன்றினை சொல்லவேமுடியாது. அது அவர்களுடைய தமிழினுடைய இலக்கியத்தில் மட்டுமல்ல மற்றும் நான் உங்களுக்கு பொருளாதார நெறி பற்றிக் கூற விரும்புகின்றேன். இண்டஸ்ட்ரியல் அவார்டு (Industrial Award) என்று

உங்களுக்குக் கொடுத்தார்களே வெங்கிடராமையா அவர்களுடைய ஒரு ஜட்ஜ்மென்ட் அல்லது ஒரு தீர்ப்பு அவர் எனக்குச் சிறந்த நண்பர் ஆவார்கள். ஆனால் அந்தத் தீர்ப்பைக் கொடுத்த பின்னர்தான் நான் அவரைக் கண்டு பேசும்படியாக நேர்ந்தது. அன்று எங்களுடைய சங்கத்திலே Stock Brokers சங்கத்திலே, அவர்கள் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவு எங்களையெல்லாம் பிரமிக்கச் செய்தது. அதை உடனே என்னுடைய மனத்திலே பாடம் செய்துகொண்டு தென்னாடு முழுவதும் அதைத் தமிழிலே பரப்பி மற்றவர்களுக்கெல்லாம் உணர்த்திக் காட்டினேன். ஒரு தலைப்பட்சமான தீர்ப்பு. முதலாளி மக்களுடைய உண்மையான துயரை எல்லாம் அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை. அவர்கள் வரவில்லை என்ற ஒரு காரணத்தைக்கொண்டு அவர்கள் தங்களுக்கு இயன்றவரை செய்துவிட்டார்கள். இன்று கோவை மில் முதலாளிகளெல்லாம் கொடுக்கக்கூடிய, தொழிலாளி மக்களுக்கு இருக்கக் கூடிய பணமானது, அந்தப்பணத்தைப் போல் B. A. பட்டம் பெற்றவனும் அல்லது இண்டர்மீடியட் (Intermediate) பாஸ் செய்தவனும் மற்றவனும் கிடைப்பதற்கு இல்லாது என்னுடைய காரியாலயங்களிலே அத்தகைய பட்டம் பெற்றவர்களெல்லாம் கேவலம் 50 ரூபாய்க்கும், 40 ரூபாய்க்கும் வேலை செய்துகொண்டுதான் வருகின்றார்கள். வாழ்க்கைத்தரத்தில் உயர்த்திட்டமானது அதிகமாயிருக்கிறது, ஏறிக்கொண்டிருக்கின்றது. இந்த நிலையிலும் திறமை பெற்றவனும் திறமை பெறாதவனும் சாதாரணமான முறையில் வேலை செய்பவனும் கட்டடத்தில் பெருக்கக்கூடிய நிலையிலுள்ளவனும், மாதம் ஒன்றுக்கு 70 ரூபாய் வாங்குகிறான் என்றால் இதைக்காட்டிலும் சிறந்த ஒரு முறையிலே எவருமே பணத்தைக் கொடுப்பதற்கே முடியாது. இவர்கள் எதற்காக இந்த குறை கூறவேண்டும். என்பதைப் பற்றியெல்லாம் எங்களுக்கு ரொம்ப அழகாக எடுத்துரைத்தார். அவர்களுடைய போக்கைச் சொல்ல வேண்டுமானால் ரொம்ப Analytical Brain என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் எதற்காக நான் ஆங்கிலத்தில் சொல்லுகிறேன் என்றால் அவ்வளவு பாகுபாடு

படுத்தி சீர்படுத்தி சின்னஞ்சிறு குழந்தையும் அறியக்கூடிய நிலையிலே அவர்கள் உணர்த்திக் காட்டுகின்றார்கள். இன்று பொருளாதார துறையிலே அவர்கள் செய்யவேண்டு மானால் சிலப்பதிகாரத்திற்குப் பொருள் காண வேண்டு மென்று அன்று நான் அவர்களைக் கேட்டுக்கொண்டேன் ஆனால் இனிமேல் நான் அதைக் கேட்டுக் கொள்ளப் போவதே இல்லை. அவர்கள் திருக்குறளுக்கு நேற்று பொருள் காணுவதற்காக தாங்களே இருந்து தங்களுடைய மேஜையிலிருந்து எழுதிக்கொண்டிருக்கும் பொழுது நான் அவர்களுடன் கலந்து பேசினேன். அதைக் கண்டு ஆச்சரியம் கொண்டேன். இருந்தாலும் அவர்கள் தமிழுக்குச் செய்யவேண்டிய தொண்டானது இருக்கின்றது. இருந்தாலும் பொருளாதாரத்துறையிலே நமது தமிழ் மகன் ஒவ்வொருவனும் அதை நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். அரசாங்கம் எதற்காகக் கடனை எழுப்பு கின்றது? பொது மக்களுடைய பொறுப்பென்ன? பொது மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் உள்ள தொடர்பு என்ன? எதற்காக அரசாங்கம் அந்தவிதமான கடன்களையெல்லாம் எழுப்பி மக்களினிடையே அதையெல்லாம் பரப்பச்செய்யும் நல்லெண்ணத்தைக் கொண்டு அவர்கள் அரசாங்கத்தை வாழ்வதற்கு அல்லது நடத்துவதற்கு முற்படுகின்றார்கள். இன்று விடுதலை பெற்ற இந்தியாவிலே ஒவ்வொறு மகனும் பொருளாதாரத் துறையிலே எங்கெந்த விதமாகக் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற அந்தப் பாடப்புத்தகங்களை முதற்கடமையாக அமைத்துத் தருவதற்கு தமிழில் ஆக்கித்தர வேண்டுமென்று கோவை மக்கள் சார்பாகவும் தமிழ்நாடு முழுவதின் சார்பாகவும் நான் அவர்களைத் தலை வணங்கிக் கேட்டுக் கொள்ளுகின்றேன். (Applause) அந்தக் காரியத்தை அவர்கள் செய்வதற்கு முற்படுவார்களேயானால் இன்று நம்மிடையே கிடைத்த அறிவுத்திறண் பெற்ற மக்களெல்லோரும் பொருளாதாரத் துறையிலே நிபுணர்கள் அல்ல; காரியத்தினாலும், செயலினாலும் அல்லது அநுபவத்தினாலும் ஒருவாறு அவர்கள் பாடத்தைக் கற்றுக் கொண்டிருக்கலாம். அந்த உண்மையான பாடத்தை

பொருளாதார முறையிலே அறிந்து கொள்ளுவதற்கு வேண்டிய ஒரு தன்மையை அவர்கள் அடைந்திருக்க மாட்டார்கள். அதை அடையவேண்டுமானால் அவர்கள் ஆக்கித்தர வேண்டிய பாடங்கள்தான் நமக்கு நல்ல படிப்பினையைக் கற்றுக்கொடுக்கும். அது மட்டுமல்லாமல் எல்லோரும் கற்றுக் கொள்ளலாம். சாதாரணமாக இன்று கிராமத்திலே தமிழிலே, நன்றாகப் பேசிப் பழகுவதற்கு எழுதப்படிக்கத் தெரிந்தவனுக்கு, தினசரிப் பத்திரிகைகளை யெல்லாம் படிப்பதற்கு வேண்டிய ஒரு பண்புடையவனுக்கு அவர்கள் எழுதக்கூடிய எழுத்தானது அவனையும் நன்றாக அறியச் செய்யும். பொருளாதார நிலையை அறியும்படியாக ஒரு மனிதனைச் செய்து விட்டால் அப்பொழுது அவன் அரசாங்கத்துடன் எவ்வாறு போராட வேண்டும், எவ்வாறு ஒத்துழைக்க வேண்டும், எந்த முறையிலே அவன் பாடுபட வேண்டும் என்றெல்லாம் அவர்கள் சொல்லக்கூடிய படிப்பினைதான் நமக்கு உயர்ந்ததாக இருக்கும்.

மற்றொன்று இவ்விடத்திலே நான் கூற விரும்புகின்றேன். நான் ஒரு பெரிய அரசியல் வாதியல்ல. மற்றும் நான் ஒரு பட்டம் படைத்தவனல்ல. அல்லது பதவி கொண்டவனுமல்ல. எனக்குக் கிடைத்த பதவியும் பொது மக்களுக்குத் தொண்டு செய்ய உதவியாகத்தான் இருக்கிறது. அந்தப் பதவியைத்தான் நான் பெற்றிருக்கிறேன். நான் ஒரு சாதாரண வியாபாரி. நான் சொல்லவேண்டிய கடமையும் இருக்கின்றது. இவ்விதமாக அவர்கள் உணர்த்தித் தந்தால் இன்று நம்முடைய அரசாங்கமானது அமையப் பெற்றிருக்கின்றதே நான் அவர்களை குறை சொல்லவிரும்பவில்லை. சென்னை அரசாங்கமாகட்டும் அல்லது மற்றைய மாகாணங்களாகட்டும் அல்லது மத்திய அரசாங்கமாகட்டும்; அங்கே நிறுவப்பட்டிருக்கக் கூடிய ஒரு கூட்டமானது அல்லது மந்திரி சபைக் கூட்டமானது அரசியல் வாதிகள் அதிகமாக இருக்கின்றார்கள். உணர்ச்சி மிகுந்தவர்கள் மிகுதியாக இருக்கின்றார்கள் தேசத்திற்குத் தியாகம் செய்தவர்களும் இருக்கின்றார்கள். ஆனால், வியாபாரத்தின்

உண்மைப் பண்பாடுகளை அறிந்து எந்த முறையிலே தேசத்தை நடத்தவேண்டுமென்ற ஒரு பாடத்தைக் கற்ற பெரியார்கள் எவருமில்லை என்பதை நான் உங்களுக்கு பகிரங்கமாக சொல்ல விரும்புகிறேன். (Applause) இதை எடுத்துச்சொல்லத்தான் வேண்டும். இவ்வாறு சொல்லா விட்டால் நமக்கு நம்முடைய நிலைமையைப்பற்றிச் சொல்லு வதற்கும் யாருமேயில்லை. ஏனென்றால் இதைச் சொல்லு வதினால் குறையொன்றுமில்லை. நம்முடைய அரசாங்கம் நம்மிடத்தே என்ன இடையூறுகள் இருக்கின்றன. இன்று கிடைத்த தலைவர்கள் எல்லாம் தியாகமூர்த்திகள் தான், உண்மை பேசக்கூடியவர்கள்தான். அன்புப்பெருக் கால் வழிந்தோடக்கூடிய நிலையிலே பிரசங்கங்களெல்லாம் புரியக்கூடிய பேராற்றல் வாய்ந்தவர்கள்தான். ஆனால், உறுப்படியான உண்மையான நிர்மாண திட்டங்களை எல்லாம் வகுக்கக்கூடிய நேரிய பண்பாட்டுடன் அமைந்த வியாபாரிக் கூட்டங்கள் நிறைந்த அறிவாளிகளை அவர்கள் தேர்ந்தெடுக்கவில்லை என்பதை நான் கூறவிரும்புகிறேன். அது ஒருவாராக அமைந்திருந்த போதிலும் மற்றொரு வகையிலே அவர்கள் அதைப்பூர்த்தி செய்து கொள்ளலாம். அதாவது மாகாணங்களில் மட்டுமல்ல நமது இந்தியா தேசம் முழுவதிலும் எவ்வளவு சிறந்த அறிவாளிகள் நிறைந்த வியாபாரிகள் இருக்கின்றார்களோ அவர்களுடைய கூட்டத்தை எல்லாம் நன்றாகக் கூட்டி அந்தந்த மாகாணங் களில் அவர்களுடன் கலந்துபேசி அந்த மக்களுக்கு இருக்கக் கூடிய இன்னல்களையெல்லாம் தீர்ப்பதற்கு அவர்கள் முற் படலாம். ஏனென்றால் நம்முடைய மக்களுக்கும், பிறருக்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற ஒரு பண்பினை உணர்த்த வேண்டிய அவசியமேயில்லை. இந்திய மக்களுக்கு அவர் களுடைய இரத்தத்திலேயே இது ஊறிக்கிடக்கிறது.

கணியன் பூங்குன்றனார் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று பாடியிருக்கிறார். அப்பொழுது அதன் நோக்கு என்ன? அப்பருடைய அருள்வாக்கு என்ன? “என் கடன் பணி செய்து கிடப்பதே.” அன்று ஔவை

விட்டுச் சென்றது என்ன? "இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்" என்று சொன்னால் பிறருக்கெல்லாம் நல்லது செய்யவேண்டும், சேவை செய்யவேண்டும், தொண்டு செய்யவேண்டும் என்ற இந்த பாடங்களை யெல்லாம் நம் புலவர் பெருமக்களும் அறிஞர்களும் உணர்த்திச் சென்றார்களேயல்லாது தனக்கு வேண்டிய சில கருத்துக்களையெல்லாம் தானே அமையப்பெற்று தன்னலங்கொண்டவர்களாக வாழ வேண்டுமென்ற ஒரு கருத்தினை அவர்கள் நமக்கு உணர்த்தினார்களில்லை. இந்தப் பண்பாட்டினை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். தமிழர்களுக்கு இந்தச் சிறந்த சேவையின் தொண்டு நன்றாகத் தெரியும். ஆகவே வியாபாரிகள் அமைந்த இந்தக் கூட்டத்தையெல்லாம் சென்னை மாகாணமோ அல்லது மத்திய மாகாணமோ அவர்கள் உருப்படியாக ஒரு நல்ல வேலையை ஆக்கிக்கொள்வதற்கு, அவர்களை யெல்லாம் அழைத்து அவர்களுடைய அறிவையெல்லாம் உபயோகப்படுத்திக் கொண்டார்களானால் அது அவர்களுக்குத்தான் பெருமையைத் தரும். தேசத்துக்கு அப்பொழுது தான் அவர்கள் தொண்டு செய்தவர்களாவார்கள்.

மற்றொன்று இவ்விடத்திலே நான் கூறவிரும்புகின்றேன். இன்று பத்திரிகை நிருபர்கள் இங்கே கூடியிருக்கிறார்கள். அவர்கள் எழுதினாலும் சரி அல்லது பறை சாற்றுவதற்கு நானும் விருப்பமாக இருக்கிறேன். இன்று நமது தலைசிறந்த ஷண்முகம் அவர்கள் நம்மிடையே இருக்கின்றார்கள் என்றால் சென்னை மாகாணமானது அவர்களுடைய அறிவைப் பூரணமாக உபயோகப்படுத்திக் கொள்ளுவது அவர்களுடைய பொறுப்பு, அவர்களுடைய உண்மையான கடமை என்பதை நான் அவர்களுக்கு வற்புறுத்தி, வலியுறுத்தி, அறிவுறுத்திக் காட்ட விரும்புகிறேன். அதை அவர்கள் நன்றாக எடுத்துக் கொள்ளலாம். அதை அவர்கள் பூரணமாக உபயோகித்துக் கொள்ளவேண்டும். இனிமேல் அவர்களுக்கு கடவுள் அருளாலேயோ அல்லது அவர்களுடைய முயற்சியின் தன்

மையாலோ அல்லது முயற்சியின் திருவினையாலோ எவ்வாறு வேண்டுமானாலும் நீங்கள் சொல்லலாம்; அதற்கு ஏற்ற முறையில் அவர்களுக்கு வேண்டிய அளவிற்கு அதிகமாகவே ஆண்டவன் அவர்களுக்கு சகலவிதமான நலன்களையும் தந்தருளியிருக்கின்றான். அவர்களுக்கு எந்தநிலையிலும் எவரிடத்திலும் எதிர்பார்த்து நிற்கவேண்டியதே இல்லை. ஆகவே, இன்று தமிழ் மாகாணத்திற்கு கிடைப்பதற்கரிய ஒரு பெரிய பொக்கிஷத்தை நம்மிடத்திலேயே வைத்துக் கொண்டு அந்தப் பொக்கிஷத்தை நல்ல வழியிலே நாம் உபயோகப்படுத்தாவிட்டால் அது நம்முடைய அறிவீனம் ஆகும், நம்முடைய மடமையாகும், நம்முடைய கண்மூடித்தனமாகும் என்றுதான் நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். ஆனால், உங்களுக்குச் சொல்லி விட்டேன் என்னுடைய நண்பர் அவர்கள் என்ற ஒரு எண்ணத்திற்காக இல்லை. உண்மையிலேயே நான் அவர்களிடத்தில் மரியாதை செய்து அவர்களுக்கு தலை வணங்குகின்றேன். அவர்களுடைய அறிவிற்கும், ஆற்றலுக்கும் அவர்களுக்குச் சிறந்த மரியாதை காட்டுவதல்லாமல் தலைவணங்கி அவர்களுக்கு தாழ்வணங்கியும், கைகூப்பித்தொழுவதற்கு நிற்கின்றேன் என்றுதான் உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

நண்பர்களே இது ஒரு புறமிருக்க இன்னும் நான் அதிகமாக பேசிக்கொண்டே போவதற்கு விரும்பவில்லை. பொதுமக்களுடைய ஒரு பொறுப்பையெல்லாம் நாமும் உணர்ந்து கொள்ளுதல்வேண்டும். அரசாங்கத்தை யெல்லாம் குற்றம் சொல்லக்கூடிய ஒரு நிலையிலே அவர்கள் செய்யக் கூடிய பல வேலைகளெல்லாம் இருந்தாலும் அவைகளெல்லாம் அடக்கமான முறையிலும் நேரிய வழியிலும் ஒழுங்கான ஒருமுறைப் பிரகாரம் அவர்களிடத்திலே நாம் சென்று அந்தக் குறைகளையெல்லாம் அறிவுறுத்திக்காட்டி அவைகளை எவ்வாறு தீர்த்துக்கொள்ளவேண்டுமோ அதைத்தான் நாம் செய்தல்வேண்டுவது மிக மிக அவசியம். ஆனால் இப்பொழுது எந்த அரசாங்கத்திடம் குறையிருக்கின்றது என்பதை சொல்லிவிட்டு அதற்கு வேறான வகையிலே நாம்

செய்யாது அவர்களுக்கு எந்த அளவு வரையிலும் நாம் ஒத்துழைக்க வேண்டுமோ; அவர்களுக்கு பூரண உதவி தரவேண்டுமோ அதையெல்லாம் செய்துதான் ஆகவேண்டும். இதைப் பொதுமக்கள் உணருதல் வேண்டும் இப்பொழுது பொதுமக்களுடைய பொறுப்பு பெருவாரியாக இருக்கின்றது. அதையெல்லாம் நாம் உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

மற்றொன்று இந்த இடத்திலே குறிப்பிட விரும்புகின்றேன். இன்று இங்கு கூடியிருக்கக்கூடிய இந்த இடமானது நண்பர் ஜி. டி. நாயுடு அவர்களுடைய இடம். இங்கே பலவிதமான கருவிகளையெல்லாம் நான் பார்க்கின்றேன். ஆனால் இவைகளில் எது என்ன வேலை செய்யுமென்பது எனக்கொன்றுமே தெரியாது. ஆனால் வேலைகள் செய்யக்கூடிய ஒரு சிறந்த கருவிகளாக அமையப்பெற்றிருக்கின்றது என்ற ஒரு அளவிலேதான் அறிகின்றேன். ஆனால் இவர்களுடைய அறிவை இவர்கள் இவ்வாறு பெருக்கி பலவிதமான துறைகளிலே செய்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் மற்றும் அவர்கள் கைத்தொழில் வேலையில் மட்டுமல்ல பாக்கி உணவுப் பொருள்களைப் பெருக்கக்கூடிய நிலையிலே அதையும் அழகாக இங்கே தோட்டத்திலே செய்து காட்டியிருக்கின்றார்கள். ஆனால் இதையெல்லாம் முதற்கடமையாக நாம் ஒரு சில கூட்டத்தாராகச் சேர்ந்து அவர்களுடைய அறிவையெல்லாம் பயன்படுத்திக்கொள்வதற்கு முற்படுதல் வேண்டும். அரசாங்கத்திற்குப் புகுத்தவேண்டிய திட்டம் ஒரு பக்கமிருக்கட்டும். இவர்கள் கையாளக்கூடிய முறை அல்லது இவர்கள் ஒரு சோளக் கதிரிலிருந்தே 39 கதிர்கள் ஆக்கக்கூடிய நிலையிலே செய்தார்களேயானால் அதனுடைய செலவு எவ்வளவு? அதற்கு எத்தனை நாட்கள் பிடிக்கின்றன? அதை நம்முடைய பொது மக்களுக்கு எவ்வாறு முதற்கடமையாக கோவையிலே உள்ளவர்களுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம்? என்றெல்லாம் பரிசிலனை செய்து அவருடைய அறிவையெல்லாம் நன்றாக

ஒரு வாய்க்கால் வழியாக ஓடும்படியாகச் செய்து அணை கட்டி பிரிதொரு பக்கத்திற்கு பிரிந்துவிடாதபடிக்கு நாம் செய்தோமேயானால் அப்பொழுது அரசாங்கத்தினிடத்திலே நாம் உறவு கொள்ளலாம்; அவர்களிடத்திலே நாம் கலந்து பேசலாம். அதற்கு என்ன செலவாகின்றது. அது எளிய மக்களும் கையாளக்கூடிய நிலையிலே இருக்கின்றதா? அல்லது அவர்கள் செய்யக்கூடிய முறைகளெல்லாம் மிகவும் விலையுயர்ந்ததாக அல்லது பெருத்த ஒரு செலவிலே ஏற்படக்கூடியதாக இருக்கின்றதா? என்பதையெல்லாம் சிந்தனை செய்து நமக்கு அவர்கள் ஆக்கித்தரக்கூடிய நிலையிலே அவர்களை நாம் வேண்டிக் கொள்ளவேண்டியது மிக மிக அவசியம். ஆனால் நம்முடைய வேண்டுகோளிற்கு அவர்கள் இணங்குவார்களோ மாட்டார்களோ அதை அவர்கள்தான் அறிவார்கள். கடவுள்கூட அறியமுடியாது! (applause) ஆகவே அதில் அவர்களுடன் நெருங்கிப் பழகக்கூடிய நண்பர்கள் கலந்து உறவாடிப் பேசி அவர்களுக்கு அதை எடுத்துச்சொல்லி பக்குவமான முறையிலே அவர்களுடைய அறிவையெல்லாம் ஒரு வாய்க்கால் வழியாக பாய்ந்தோடும்படியாகச் செய்து அதனுடைய புலமையையோ அல்லது அதனுடைய சக்தியை யெல்லாம் நன்றாகப் பரப்பி ஒரு சிறந்த பணியைச் செய்யக்கூடிய நிலையிலே நீங்கள் செய்யவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டுவதோ, தூண்டுவதோ, அதற்கு நீங்கள் அடிகோலுவதோ அதெல்லாம் கோவை மக்களிலே ஒரு சிறந்த நண்பர்களுடைய கூட்டத்தின் பொறுப்பு என்பதை நான் அவர்களுக்கு தலை வணங்கிச் சொல்லிக்கொள்ளுகின்றேன். அதை அவர்கள் அவ்வாறு செய்வார்களேயானால் அவர்களுக்குக் கிடைத்த அறிவையெல்லாம் பற்பல வழிகளிலே சிதறுண்டு கிடக்காமல் அவைகளையெல்லாம் சேர்த்துவைத்து நாட்டிற்கு நல்ல சேவை செய்வது ஒரு பக்கமிருந்தாலும், முதற் கடமையாக கோவை ஜில்லாவிலே கோவைமா நகரவாசிகளுக்கு அது முதற்கடமையாக

உபயோகப்படக்கூடிய நிலையிலே செய்யவேண்டியது அவர்களுடைய கடமை! கடமை!! கடமை!!! என்று நான் வற்புறுத்திக் கூறுகின்றேன். அதையும் அவர்கள் செய்து தருதல்வேண்டும்.

இன்னும் பலவாரியாக நான் பேசிக் கொண்டிருக்க விரும்பவில்லை. இங்கு அறிவு நிறைந்த நண்பர்கள் இருக்கின்றார்கள். அநுபவம் மிகுந்தவர்கள் இருக்கின்றார்கள். அவர்களெல்லாம் பேசக்கூடிய நிலையிலே எனக்குப் பெருமை தந்து என்னைப் புகழுரைகளில் பாராட்டி என்னைப் பேச வேண்டும் என்ற ஒரு காரணத்தினாலே எனக்குக் கொடுத்த ஒரு வேடமிருக்கின்றதே இந்த நடிப்பு! இந்தநடிப்பை நடித்துதான் தீரவேண்டும். மேடையிலே ஏறி ஒருவன் வேடம் போட்டுக்கொண்டபின்னர் அவன் சேவகனாக நடித்தாலும் சரி அரசனாக நடித்தாலும் சரி அவன் அந்த அளவிலே நடித்துத்தானே தீரவேண்டும். அந்தமுறைபற்றி நானும் எனக்குக் கொடுத்த ஒருகால அளவிலே எனக்குக் கொடுத்த ஒரு பதவியின் முறையிலே இந்தவேஷத்தை என்னால் இயன்ற அளவிலே திறமையாக நடித்தேனோ இல்லையோ அதனுடைய பண்பாட்டினைக் கூறவேண்டியது உங்கள் பொறுப்பு, என்னளவிலே என்னுடைய பொறுப்பை ஒருவாறு நான் முடித்துக்கொண்டேன். நீங்கள் கூறிய புத்திமதிகளையும் உங்களுடையஆசி மொழிகளையும் கொண்டு என்னால் இயன்ற அளவிலே சிறப்பாக நமது தமிழ் நாட்டிற்கும் மற்றும் சென்னைமா நகரத்திற்கும் இயன்ற அளவிலே தொண்டு புரிவேன் என்பதை உங்களுக்கு உறுதியிட்டுக் கூறுதலுடன் உங்களுடைய துணையானது எனக்கு என்றென்றும் நின்று உதவ வேண்டும் என்று உங்களை மீண்டும் தாழ்மையுடன் வணங்கிக்கொண்டு எனக்கு பெருமை தந்த உங்களுக்கு என்னுடைய நன்றியறிதலை மீண்டும் வற்புறுத்திக் கூறிக் கொண்டு என்னுடைய சிற்றுரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு வி. ஆறுமுகம் பிள்ளை

அன்பிற் சிறந்த பெரியோர்களே! தாய்மார்களே!

இன்று தலைமை தாங்கும் ஐயா திரு. இராமலிங்கம் செட்டியாரவர்களுக்கு என் அன்பார்ந்த வணக்கம். நமது கோவை நகருக்கு எங்களுடைய வேண்டுகோளிற்கு இணங்கி சென்னைமா நகரத் தந்தையவர்கள் எழுந்தருளியதற்கு இந்நகர மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறோம்.

"தமிழ் மொழிக்காகவே தமது வாழ்நாள் முழுவதும் உழைத்த பேராசிரியர் திரு. க. நமசிவாய முதலியாரவர்களின் மாணவர்களில் தலைசிறந்த மாணாக்கர் உயர்திரு சென்னை மேயர் இராமசாமி நாயுடு அவர்கள் தமிழ் மொழியில் பேர் ஆராய்ச்சி உடையவர்கள் என்பதை நினைக்கும் தோறும் எங்கள் உள்ளம் பெருமகிழ்ச்சி அடைகிறது. மேலும் அரசியலிலும் வாணிபத் துறையிலும் தாங்கள் சிறந்த பணியாற்றி இருக்கிறீர்கள். மேலும், மேலும் நம் நாடு சிறப்புற்று ஓங்க தங்கள் மதி, நுட்பம் பெரிதும் பயன் படும். தாங்கள் மே. த. ஸ்ரீ சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களைப் போன்ற அரும்பெரும் தலைவர்களின் நட்பைக் கொண்டிருக்கின்றீர்கள். நாட்டிற்கு நல்ல தொண்டாற்றி தொழிலாளி, முதலாளி பிரச்னைகளுக்கும், ரேஷன் போன்ற பிரச்னைகளுக்கும் நல்ல முடிவுகண்டு நாட்டை நல்ல வழியில் நடத்திவரவேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நண்பர்களே, மேலும் ஒன்று. சென்ற ஷெரிப் பட்டம் வந்தபோது உயர்திரு கோபால் நாயுடு அவர்கள் தலைமையில் இதே இடத்தில் அவர்களுக்கு விருந்துபசாரம் நடத்தப் பட்டது. இன்று மேயர் பதவியை அடைந்தபோது நமது ஐயா T. A. இராமலிங்கம் செட்டியார் அவர்களின் தலைமையில் அவருக்கு உபசாரம் நடந்தது. இதைப்போல மேலும் இன்னும் இதைவிட மேலான பதவி கூடிய சீக்கிரத்தில் அவருக்குக் கிடைக்கவேண்டுமாய் இறைவனை வேண்டிக் கொள்ளுகிறோம். வணக்கம்!

திரு நஞ்சுண்டைய்யா

தலைவர் அவர்களே, பெரியோர்களே, சகோதர சகோதரிகளே !

இப்பொழுது இம்மாபெரும் கூட்டத்தில் அருமையான தமிழை நீங்கள் கேட்டீர்கள். இந்த வைபவத்தில் கலந்து கொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததற்கு நான் இந்த தேநீர் விருந்தை ஏற்படுத்திய எனது நண்பர்களுக்கு என்னுடைய வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுவதோடு முதன்மையாக நமது இடையிலே வந்திருக்கும் பெரியார் இராமசாமி நாயுடு அவர்கள் தான் ஏதோ ஒரு வியாபாரி என்ற முறையிலே இங்கு நான் ஒன்றும் அதிகமாகப் பேச வரவில்லை என்று தெரிவித்துக் கொண்டார்கள். ஆனால் இதுவரையில் அவருடைய உபன்யாசத்தைக் கேட்ட அன்பர்கள் அனைவருக்கும் ஒரு வேளை அவருக்கு நமது கல்லூரியிலோ அல்லது வேறு கல்லூரியிலோ B. A., B. L. என்ற பட்டம் ஏதாவது கொடுத்திருந்தால் என்னைப் போன்ற வக்கீல் உத்தியோகம் உள்ளவர்களுக்கு நமது ஹைகோர்ட்டிலோ அல்லது இந்திய ஹைகோர்ட்டிலோ ஏதாவது சிறிதாவது வேலை கிடைத்திருக்குமா, அல்லது எல்லாரும் இராமசாமி நாயுடு அவர்களையே கூப்பிட்டுத் தங்களுடைய கேசுகளை வாதிக்கச் சொல்லுவார்களோ என்ற ஒரு சந்தேகம் கூட எனக்கு வந்தது. அதுமட்டுமல்ல. அவர் தமிழ், அந்த தமிழ்நாட்டிலே பிறந்த மக்களுடைய ஓர் பழைய கீர்த்தி, மற்றும் தற்காலத்திலே தமிழ் நாட்டில் இப்பொழுது உழைத்து வரும் நமது ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியார் அவர்கள் போன்ற தமிழ் அறிஞர்கள், உலக அறிஞர்கள் இவர்களைப்பற்றி நமது கோவைமா நகருக்கே ஒரு கீர்த்தி உண்டாகும்படியாக, அவரை வாழ்த்த நாம் ஏற்படுத்திய இந்த தேநீர் விருந்தில், நமது நகரத்தையே வாழ்த்தியிருக்கிறார் என்றால் அவர்களுடைய கீர்த்தி கோவைமா நகரத்தில்மட்டுமல்ல, தென் இந்தியாவில்மட்டுமல்ல ; நமது அகில இந்தியாவிலேயே பரவும்.

அவருடைய உதார குணம் அவர் எங்கு போனாலும் எங்கெங்கு கண்டாலும் நல்லதையே பார்ப்பார் என்ற ஒரு கொள்கையைக் கடைப்பிடித்தவர் என்பதற்குச் சிறிதேனும் ஐயமில்லை. அன்னார் இங்கு வந்து நமக்கு அரிய பெரிய விஷயஙகளை எடுத்துச் சொன்னதற்கு உங்கள் சார்பாகவும் இந்நகரமக்களின் சார்பாகவும் நான் மனமார்ந்த வந்தனத்தை அன்னாருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல் இங்கு எங்களுடைய வேண்டு கோளுக்கு இணங்கி நமது தமிழ் நாட்டிற்கே திலகம்போல் விளங்கும் T. A. இராமலிங்கம் செட்டியாரவர்கள் இப் பொழுது தமிழ் நாட்டினுடைய கீர்த்தியை இங்குமட்டுமல்ல டெல்லியிலும் நிலை நாட்டுகிறார். மற்றும் கூட்டுறவு முறை என்ற இயக்கம் உலகமெங்கும் எங்கெங்கு பரவியிருக் கிறதோ அந்த முறையிலே தனக்கு எல்லா வசதிகள் இருந்தும் மற்றும் எப்பேர்ப்பட்ட ஒரு முதலாளி என்ற ஹோதாவிலிருந்தும் பாமர மக்கள் என்ற ஹோதாவிலே இந்த கூடடுறவு முறை எவ்வளவு உபயோகமாகிறது என்று நமக்கு ஏற்ற விதத்திலே நடத்திக்காட்டிய அப்பேர்ப்பட்ட பொறுப்பையும் சகலத்தையும் வாய்ந்தவரும் இந்த நகரசபை விஷயத்திலே ஒன்றிரண்டு விஷயங்களைச் சுட்டிக்காட்டி அது நமது தலைவர் இராமசாமி நாயுடு அவர்கள் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம் என்பதை யும் இந்தக் கூட்டத்திலே எடுத்துக்காட்டிய அன்னாருக்கும் நான் வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன்.

இறுதியாக அன்பர்களே நமது ஜி. டி. நாயுடு அவர்கள் இயற்றிய இந்த ஓர் பெரியசாலை ரொம்பவும் புண்ணியம் படைத்தது நல்ல காலத்திலே அஸ்திவாரம் போட்டது என்றுதான் நான் சொல்லக் கடமைப் பட்டிருக் கிறேன். இப்பேர்ப்பட்ட தேநீர் விருந்துகள் சாதாரணமாக எவ்வளவு கூட்டங்கள் நடந்திருக்கின்றன என்பதை நீங் களெல்லோரும் அறிவீர்கள். இன்னும் மேன்மேலும்

இப்பேர்ப்பட்டக் கூட்டங்களுக்கு அவர் நம் எல்லோரையும் மறு முறையும் கூப்பிடுவார். மற்றும் நாங்களெல்லோரும் கலந்துக் கொள்ளுவோம். மேற்கொண்டும் இப்பேர்கொண்ட ஒரு அஸ்திவாரக் கட்டிடங்கள் நம் நகரிலே இன்னும் அதிகப்படவேண்டும். நமது மேயர் அவர்கள் மதராஸிலும் இப்பேர்ப்பட்ட கூட்டங்கள் அதிகம் அதிகமாக நடத்துவார்கள். அன்னாருக்கும் இந்தக் கூட்டத்தில் வந்து நீங்களெல்லோரும் கலந்து கொண்டு இந்த வைபவத்தை நடத்தி கொடுத்ததற்கு உங்களெல்லோருக்கும் வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Printed at U. M. S. Power Press, Coimbatore 23—12—48.